<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**123/2019

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 10.03.2026

**Pw**1 (ரோகிணி)

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 1,2 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.காம்., படித்துளளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப் பார்த்தேன். சதாசிவ கவுண்டர் எனது தாத்தா. அவரின் தகப்பனார் பெயர் கருப்பண கவுண்டர். எனது தாத்தா மற்றும் அவரின் தகப்பனார் பெயர் விவரங்களை யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் 3ம் நபர் மூலம் தெரிந்து கொண்டேன்.அவர்கள் பெயர் என்ன என்றால் என் தகப்பனாரின் உறவினர் வசந்தாமணி மூலம் தெரிந்து கொண்டேன். வசந்தாமணி எனக்கு பெரியம்மா முறை ஆகும். சதாசிவ கவுண்டருக்கு குமாரசாமி மற்றும் முத்துக்கிருஷ்ணன் என்ற மகன்கள் மற்றும் பாப்பாத்தி என்ற மகள் உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 1263. விஸ்தீரணம் 3 ஏக்கர். தாவா சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை படித்துப பார்த்தேன். சொத்து விவரத்திற்கு தேவையான விவரத்தை நான் தான் சொன்னேன். தாவா சொத்து விவரம் என்பது சர்வே எண் 1263, 3 ஏக்கர் விஸ்தீரணம் என சொல்லியுள்ளேன். தாவா சொத்து தொடர்பாக நான் சொல்லியுள்ள சர்வே எண் மற்றும் வீஸ்தீரணம் தவறு என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கிரய ஆவணம் சதாசிவ கவுண்டர் மகன் கருப்பண கவுண்டர் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் அது தவறானது. அந்த ஆவணம் 15.07.1958 ல் ஆவண எண் 174/58 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் 1961ம் வருடத்திய பத்திரத்தை (வாசாஆ1)படித்துப பார்த்துள்ளேன். செங்கோட கவுண்டர் மகன் பழனிசாமி என்பவரை பற்றி எனக்கு தெரியாது, அவர் எனது உறவினரா என்றால் எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டர் மகன் சின்னப்ப கவுண்டர் மற்றும் சென்னிமலை கவுண்டர் ஆகியோரை தெரியாது. குப்பண்ண கவுண்டர் மகன் கிட்டன்ன

கவுண்டரை தெரியாது. 1961 ம் ஆண்டு சதாசிவ கவுண்டருடன் சேர்ந்து மேற்படி நபர்கள் ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால சரிதான். மேற்படி நபர்கள் சதாசிவ கவுண்டரின் கூட்டு பங்குதாரர்கள் என்றால் சரிதான். வாசாஆ 1 ல் சதாசிவ கவுண்டருக்கு பிதுராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என சொல்லப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு இல்லை என கூறுகிறார். சதாசிவ கவுண்டருக்கு தாவா சொத்து கிரய வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.10 16:55:14 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS